<u>நாள் 30.06.2026</u>

<u>அசல் வழக்கு எண். 73/2019</u>

<u>வா.சா.1. பெஞ்சமின் ஜோசப்</u>

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

தாவா சொத்து இந்த வழக்கின் 3ஆம் பிரதிவாதி முத்துராஜா என்பவருக்கு கிரையப்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்துராஜாவிடமிருந்து 1ஆம் பிரதிவாதி உமாதேவி 26.11.2012 ஆம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தற்போது வரைக்கும் வழக்கு சொத்திற்கு முத்துராஜா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் இல்லை. சிங்கராயர் மகன் பீட்டர் பெயரில் உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

நான் 1ஆம் பிரதிவாதிக்கு ரூ.2,70,000/– கடனாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கிரையத்திற்கு தான் கொடுத்தேன். எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினேன் என்றால் ரூ.9,00,000/–த்திற்கு கிரையம் வாங்கினேன். நான் 1ஆம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கியதாக சொல்லும் தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.2,70,000/– கொடுத்தேன். நான் வழக்கு சொத்தை கிரையமாக வாங்கவில்லை என்றாலும், 1ஆம் பிரதிவாதி என்னிடம் ரூ.2,70,000/– கடனாக வாங்கியதற்கு கிரையமாக எழுதிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்திலும் இல்லை என்றாலும், 1ஆம் பிரதிவாதி தான் தற்போது வரை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 3 வருடம் அனுபவத்தில் இருந்தேன். நான் மூன்று வருடம் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்தேன் என்று சொல்வதற்கு ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

தாவா வழக்கு சொத்து சம்மந்தமாக உமாதேவி என் மீது OS.No.490/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். OS.No.490/2017 வழக்கில் 22.06.2017 ஆம் தேதி நான் கடனிற்கு ஆதரவாக ஒரு வருத்தமான பத்திரம்

எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி OS.No.490/2017 வழக்கில் தாக்கல் செய்துள்ள வருத்தமான பத்திரத்தை நான் நீதிமன்றம் மூலம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை கடனிற்காக மட்டும் தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றாலும், வழக்கு சொத்தை எந்த காலத்திலும் நான் அனுபவிக்கவில்லை என்றாலும், 1ஆம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கை 1, 2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>3ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்கை நான் யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் முத்துராஜா, உமா மீது தாக்கல் செய்துள்ளேன். எந்த எந்த சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.39/3, 4. மொத்தம் 3 ஏக்கர் 45 செண்ட் ஆகும். கேணி மேடு 25 செண்ட். 3ஆம் பிரதிவாதி முத்துராஜாவின் அப்பா பெயர் சிங்கராயர், அம்மா பெயர் பிலோமினால் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் முத்துராஜா, பென்ஸ்பீட்டர், சகாயராணி, மரியஜோதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சர்வே எண்.40/3A, சர்வே எண்.40/4A ஆகியவற்றில் மொத்தம் 1 ஏக்கர் 51 செண்ட் நிலம் பிலோமினாலுக்கு சுயார்ஜித பார்த்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் 90 செண்ட் நிலத்தை பிலோமினால் முத்துராஜாவிற்கு தானமாக கொடுத்துவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

22.07.2002 ஆம் தேதி முத்துராஜா குடும்பத்தில் ஒரு பாகப்பிரிவினை நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் யாரிடம் கிரையம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் ஜான்னிடமிருந்து கிரையம் வாங்கினேன். ஜான்க்கு முன்பு சொத்து யார் யாருக்கு பாத்தியம் என்று பத்திரங்களை வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. முத்துராஜா பத்திரம் என்னிடம் இருந்தது. 03.12.2004 ஆம் தேதி கே.ஆர்.ஜான் யார் யாரிடம் கிரையம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் முத்துராஜாவிடம் தான் கிரையம் வாங்கினார். அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். 05.11.2008 ல் இந்த வழக்கில் கண்ட 2வது அயிட்ட சொத்தை கே.ஆர்.ஜான், முத்துராஜாவிற்கு கிரையம் செய்து

கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 05.11.2008 ஆம் தேதிய முத்துராஜா பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்களுக்கு தற்போது வரைக்கும் முத்துராஜாவின் தந்தை சிங்கராயர் மற்றும் தாயார் பிலோமினால் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2009 வருடம் முத்துராஜா கே.ஆர்.ஜானிடம் ரூ.1 இலட்சம் கடன் வாங்கினாரா என்றால் அது பற்றி தெரியாது. தாவா 2வது அயிட்ட சொத்து தற்போது வரைக்கும் முத்துராஜா அனுபவித்தில் தான் உள்ளது என்றால் இல்லை. என் அனுபவத்தில் இருந்தது. முத்துராஜா தாவா 2வது அயிட்ட சொத்தை தருமத்துபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அவரது தாயார் பெயரில் அடமானம் வைத்துள்ளாரா என்றால் தெரியாது. 25.08.2018 ஆம் தேதி நானும், எனது மகன்களும் அத்துமீறி நுழைந்து உழவு போட்டோம் என்று சொல்லி புகார் கொடுத்தார்களா என்றால் புகார் கொடுத்தார்கள். அந்த புகாரின் அடிப்படையில் என் மீது, எனது மகன்கள் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். கே.ஆர்.ஜான் பெயரில் உள்ள 29.07.2009 ஆம் தேதிய கிரையப்பத்திரமும், எனது பெயரில் உள்ள 07.08.2015 ஆம் தேதிய கிரையப்பத்திரமும் நானும், கே.ஆர்.ஜானும் மோசடியாக உற்பத்தி செய்த பத்திரங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு பத்திரங்களும் எப்போதும் நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நானும், 4ஆம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 22.12.2018 ஆம் தேதி முத்துராஜா தாவா 2வது அயிட்ட சொத்தை அக்கிரமிப்பு செய்தார் என்று சொல்லியுள்ளதில் அது சம்மந்தமாக அந்த தேதியில் போலீசில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்தேன் என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா 2வது அயிட்ட சொத்திற்கு எனது பெயரில் பட்டா வாங்கவில்லை என்றால் மனு கொடுத்தேன். அதிகாரிகள் மாற்றிக்கொடுக்கவில்லை.

எனது பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா 2வது அயிட்ட சொத்தை நான் அனுபவித்து வந்தேன் என்று சொல்வதற்கு வருவாய்துறை ஆவணங்கள் ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது தேங்காய் திருடியதாக நான் கொடுத்ததாக கூறும் புகார் மனுவின் பேரில் காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகார் பொய் புகார் என்பதால் தான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்து எப்போதும் முத்துராஜா அனுபவித்தில் தான் உள்ளது என்றாலும், 22.12.2018 ஆம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக நான் கூறுவது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.6 ஆவணமானது வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்த ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் ஜெராக்ஸ் நகல் என்பதால் சட்டப்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தில் 3ஆம் பிரதிவாதியின் அனுபவம் சட்டப்படியானது என்றாலும், அதை நான் ஆட்சேபனை செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

Typed to my dictation in Open Court read over to me and Acknowledged by him / her to be correct.

THIYAGARAJAN GOKULAKRISHNAN
Digitally signed by THIYAGARAJAN GOKULAKRISHNAN
Date: 2026.06.30 18:03:11 +0545

Principal Sub Judge,
Dindigul